OS No.93/2018, நாள்: 26.02.2020

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கடேச பெருமாள் | வயது | : 56 |
| தந்தை பெயர் | : ஆரிமுத்து நைனார் | வேலை | : சுகாதார ஆய்வாளர் |
| கிராமம் | : அகரம் | நாட்டினம் | : இந்து |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | சாதி | : ___ |

வா.சா.2 ___ வெங்கடேச பெருமாள் ஆஜர், குறுக்கு விசாரணை :-

என் தந்தை பெயர் தங்கவேல் (எ) ஆரிமுத்து நைனார் என்றால் சரிதான். என்னுடைய தந்தைக்கு 5 மகன்கள், 1 மகள் என்றால் சரிதான். முதலில் பெரியதம்பி, இரண்டாவது கோவிந்தராஜ், மூன்றாவது ராமசாமி, நான்காவது லட்சுமணன், ஐந்தாவது நான் என்றால் சரிதான். என்னுடைய சகோதரி பெயர் என்னவென்றால் துளசி. குப்பசாமி நைனார் எனக்கு என்ன உறவு என்றால் என்னுடைய பெரியப்பா. என்னுடைய பெரியப்பாவிற்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். அதனால் எனது தந்தை மூத்த சகோதரர் பெரியதம்பியை தத்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். தத்து கொடுத்து 40 -45 வருடங்கள் ஆகியிருக்கும் என்றால் சரிதான். தற்போது எனக்கு 56 வயதாகிறது என்றால் சரிதான். தற்போது பணியிலிருக்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய சகோதரர் ராமசாமி எப்போது இறந்தார் என்றால் இரண்டு வருடங்களுக்கு முன்பு இறந்தார். வாதி பெரியதம்பிக்கும், பிரதிவாதியின் தந்தை ராமசாமிக்கும் இதே நீதிமன்றதிதல் உரிமையியல் வழக்கு நிலுவையில் இருந்து வந்தன என்றால் அதுப்பற்றி எனக்கு

தெரியாது. இந்த வழக்கு திரௌபதியம்மன், காளியம்மன் கோவில்களை பொறுத்து என்றால் சரிதான். மேற்படி இரண்டு கோவில்களுக்கு யார் பூசாரியாக இருந்து வருகிறார்கள் என்றால் கடந்த 3 ஆண்டுகளாக போகவில்லை அதனால் எனக்கு தெரியாது. கோவில் கும்பாபிஷேகம் 08.02.2019 முதல் 11.02.2019 வரை நடைபெற்றது என்றால் சரிதான். கோவில்களில் திருவிழாக்கள் நடைபெறும்பொழுது காவல் துறைக்கும் வருவாய் துறைக்கும் தெரிவிக்கவேண்டும் என்றால் சரிதான். அவர்களிடமிருந்து முறையான அனுமதி பெற்றுதான் எந்த விழாவையும் நடத்தவேண்டும் என்றால் சரிதான். அந்த கோவில்களில் மண்டல பூஜை 22.03.2019ம் தேதியுடன் நிறைவு பெற்றது என்றால் சரிதான். கோவிலில் கும்பாபிஷேகம், மண்டல பூஜை சிறப்பாக நடைபெற்று முடிந்துவிட்டது என்றால் சரிதான். தங்கவேல் நைனார் தர்மகர்த்தவாக இருந்ததாக பெரியதம்பி தாக்கல் செய்த வழக்கில் ஒப்புக்கொண்டு அழைப்பிதழிலும் அவ்வாறு போட்டுள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. குப்புசாமி நைனார் தர்மகர்த்தவாக இருந்ததற்கு எந்த ஒரு அழைப்பிதழும் வாதி தாக்கல் செய்யவில்லை என்றால் அவர் தர்மகர்த்தவாக இருந்தார் ஆனால் வாதி தாக்கல் செய்தாரா, இல்லையா என்று தெரியாது. குப்புசாமி நைனார் எப்போதும் தர்மகர்த்தாவாக இல்லை என்றும் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவ்வாறு பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தங்கவேல் நைனார் தர்மகர்த்தவாக இருந்தபோது வாதியை குப்புசாமி நைனாருக்கு தத்துகொடுத்துவிட்டதால் பின்னிட்டு ராமசாமி நைனார்தான் தர்மகர்த்தவாக இருந்து வந்தார் என்றால் குப்புசாமி நைனாருக்கு பின்னிட்டு பெரியதம்பி நைனார்தான் தர்மகர்த்தவாக இருந்தார் அதற்குபின்னிட்டுதான் ராமசாமி இருந்து வந்தார். குப்புசாமியும், பெரியதம்பியும் எப்போதுமே தர்மகர்த்தவாக இருந்ததில்லை என்று

சொன்னால் சரியல்ல. வாதியை தத்துகொடுத்தபோது அவருக்கு 22 வயதானது என்றும் அவர் சிறியவராக இருந்ததால் தங்கவேல் நைனார் தர்மகர்த்தவாக இருந்தது கூறுவது பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. ராமசாமி நைனார் 2018ம் தேதி இறந்த பின்னிட்டு வழக்கின் பிரதிவாதிதான் கோவிலின் தர்மகர்த்தவாக இருந்து வருகிறார் என்றால் சரிதான். 24.10.2018ம் தேதியில் பிரதிவாதி அத்துமீறி நுழைய முயற்சித்தார் என்று கூறுவது வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக கூறுகிறேன் என்றும் தர்மகர்த்தாவாக இருந்தபோது அவர் அத்துமீறி நுழைய வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் இந்த வழக்கு போடுவதற்காக அவ்வாறு கூறியுள்ளார் என்றும், வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ராமசாமி தர்மகர்த்தவாக இருந்தபோது காவல் துறையும், வருவாய்துறையும் அதை ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்றும அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்ப்பட்டுள்ளனர் என்றால் அது எனக்கு தெரியாது. எங்கள் ஊாகவுண்டர் தற்போது ஜெயபால் என்றால் சரிதான். மந்திரிகவுண்டார் யார் என்றால் தெரியாது. பிரதிவாதியின் ஊர்கவுண்டரும், மந்திரிகவுண்டரும் சோந்து கோவில் விஷேசத்தை நல்லபடியாக நடத்தி முடித்துள்ளார்கள் என்றும் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.